சூழ்நிலை உருவாகும். 15 ஆம் தேதியோடு தண்ணீரை நிறுத்தினால் கடலைப் பறிக்கும் நிலைமை கடினமாக இருக்கும். இன்னும் கடலைப் பயிர் முற்றாத சூழ்நிலை இருந்து வருகிறது. ஆகவே இன்னும் கூடுதலாக ஒரு தண்ணீர்விட இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறோம். விவசாயிகளும் அதை எதிர்பார்க்கிறார்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் 30–4–1992 வரையில் மீண்டும் ஒரு முறை தண்ணீர்விட முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15–4–1992 வரையில் நமக்குத் தேவையான தண்ணீர் 2.93 டி.எம்.சி. என்று சொன்னேன். இன்றைக்கு இருக்கிற கணக்கைப் பார்த்தால், மின் நிலையங்களிலிருந்து வரக்கூடிய தண்ணீரைக் கணக்கு பார்க்கிறபோது, 3.14 டி.எம்.சி. தண்ணீர் இருக்கிறது. ஆகவே மேற்கொண்டு 15 நாட்களுக்கு தண்ணீர் விடுவதில் எந்தவிதச் சிக்கலும் இருக்காது. அப்படி குறைவாக இருந்தாலும், 'பை–பாஸ்' மூலம் இந்தப் பயிர்களுக்குத்த ண்ணீர் விடுவதற்கு அரசு ஆலோசித்து வருகிறது ஆகவே, 30–4–1992 வரை தண்ணீர்விட தேவையிருக்கும் என்று அரசு கருதினால் நிச்சயமாக இந்த அரசு அதைச் செய்யும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடு 30–4–1992 வரையிலும் அந்தப் புஞ்சைப் பயிர்களுக்குத் தண்ணீர் விடப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக்கணக்கு குழுவின் அறிக்கைகளை அளித்தல் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

முற்பகல் 10.40

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்:

(1) 1982–83 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதியொதுக்கங்களிலும் மிகைச் செலவு பற்றிய அறிக்கையின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த

1992 ஏப்ரல் 7] [திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்]

ஐம்பதாவது அறிக்கை (எட்டாவது பேரவை) யில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய நாற்பதாவது அறிக்கை, மற்றும்

(2) தமிழ்நாடு அரசின் 1967–68 மற்றும் 1968–69 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) கணக்குகள் குறித்த இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கைகளில் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை தொடர்பான பொதுக் கணக்குக் குழுவின் தனது முந்தைய அறிக்கைகளிலும் நான்காவது அறிக்கை(ஏழாவது பேரவை) மற்றும் இருபத்தி மூன்றாவது அறிக்கை (எட்டாவது பேரவை) யில் மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய நாற்பத்தி ஒன்றாவது அறிக்கை ஆகியவைகளை நான் இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, இந்தியத தணிக்கைத் துறைத் தலைவரின் 1985–86 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) நகராட்சி நிருவாகம் – குடிநீர் வழங்கல் துறை தொடர்பான பத்திகள் மீதான குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை ; மற்றும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் செயல்பாடு குறித்த பொது நிறுவனங்கள் குழு (1989–90) அளித்த இருபத்தி ஐந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த மேல் நடவடிக்கை பற்றிய குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை அகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

(இ) அரசு உறுதி மொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. இரா. நடேசன், அரசு உறுதி மொழிக்குழுவின் தலைவர்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதி மொழி குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) நான்காவது அறிகயை இப்பேரவைக்கு நான் அளிக்கின்றேன்.